தரம் - 09

# தமிழ்மொழியும் இலக்கியமும்

அலகு – 05

## மருமகனுக்கு விருந்து

தமிழ்மொழியும் இலக்கியமும்



மருமகனுக்கு விருந்து

Mr.R.Thinesh
KM/TK/Thampaddai maha vidyalayam

# மருமகனுக்கு விருந்து



- மருமகனுக்கு விருந்து எனும் இக்கதையானது நாட்டார் கதைகளுள் அடங்குகின்ற ஒன்றாகும்.

- நாட்டார் இலக்கியமென்பது கிராமிய பாமர மக்களால் வாய்மொழிமூலமாக கூறப்பட்டு வருகின்ற இலக்கியமாகும்.

- நாட்டார் இலக்கியங்கள் நகைச்சுவை மிக்கதாகவும், கிராமிய பண்பாட்டு பழக்கவழக்கங்கள் கொண்டதாகவும் சிறப்பாக அமையப்பெறுவனவாகும்.

- இதன்படி மருமகனுக்கு விருந்து எனும் இக்கதையும் நகைச்சுவை மற்றும் கிராமிய மரபுரீதியான பழக்கவழக்கங்கள் நிரம்பப்பெற்றிருப்பதையும் காணமுடிகின்றது.

## 1) மிகப் பொருத்தமான விடையை தெரிவு செய்க

1. "வாங்க மருமகனே வீட்டில எல்லோரும் சுகம்தானே. என்று குசலம் விசாரித்தார் மாமியார்"
   இதில் குசலம் என்பது
   1. குறிசொல்லல் 2. சூனியம் 3.நலம் 4. சூரணம்
2. "சீதனமாக நாங்கள் உரல், சுளகு, அரிதட்டு எல்லாம் கொடுத்தம்." சீதனம் என்பதன் பொருள்
   1. வரதட்சனை 2. பரிசு 3.பொற்கிளி 4. பணம்
3. "பாவம் மாமனார் வயதானவர் ஓடமுடியவில்லை" இதில் பாவம் என்பதன் எதிர்ப்பதம்
   1. சாபம் 2. புண்ணியம் 3. தீமை 4. தருமம்
4. "தம்பி விருந்தாளியை பிடிச்சுக்கட்டு" கட்டு என்பதன் எதிர்ப்பதம்
   1. வெட்டு 2. அவிழ் 3. சுருட்டு 4. மடி
5. "வாங்க மச்சான் சௌக்கியமா?" இதில் மச்சான் என்பதன் எதிர்ப்பால் வடிவம்
   1. அத்தான் 2. அத்தை 3. மச்சாள் 4. சகலன்



## 2) சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக

1. மருமகனுக்கு விருந்து எனும் கதை நாட்டார் கதைகளில் ஒன்றாகும் ( ✓ )
2. சூரணம் என்பது சித்த மருந்துகளில் ஒன்றல்ல ( ✗ )
3. படித்தான் என்பது செயற்படுபொருள் குன்றாத வினையாகும் ( ✓ )
4. நடந்தான் என்பது செயற்படுபொருள் குன்றாத வினையாகும் ( ✗ )
5. எரி என்பது செயற்படுபொருள் குன்றிய வினையாக மட்டும் வருவதாகும் ( ✗ )

## 3) மிகப் பொருத்தமான விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்க

1. தனது மூத்த மகளை அயலூரில் …………………….. செய்து வைத்தார். (திருமனம் , திருமணம்)
2. வெயில் காலத்தில் குளிர்ச்சியான ………………….. அருந்த வேண்டும். (பாணம் , பானம்)
3. அரசன் தனது மக்களுக்காக …………….. செய்தான். (பனி , பணி)
4. குறிசொல்பவன் பல விடயங்களை துல்லியமாக ……………….. கூறினான். ( கணித்து , கனித்து)
5. புலவன் தன் கவிதைகளை ………………… கொண்டு எழுதினான். (ஆணி , ஆனி)

## 4) பொருத்தமான எதிர்ப்பாற் சொற்களுடன் இணைக்குக.


| | |
|---|---|
| 1. குடும்பஸ்தர் | கணவன் |
| 2. குறிகாரன் | மாமனார் |
| 3. மனைவி | குடும்பஸ்திரி |
| 4. மைத்துனன் | குறிகாறி |
| 5. மாமியார் | மைத்துனி |



5) பின்வரும் வினைச்சொற்களை செயற்படுபொருள் குன்றிய, குன்றாத, பொது வினைகளாக வேறுபடுத்துக.

நனை நட படி உண் சிரி முறி எடு உடை இரு

கொடு கரை அழு எரி வாசி எழும்பு



செயற்படுபாருள் குன்றியவை - நட, சிரி, இரு, அழு, எழும்பு

செயற்படுபாருள் குன்றாதவை - படி, உண், எடு, கொடு, வாசி

பொது வினைகள் - நனை, முறி, கரை, எரி, உடை

## 6) சுருக்கமான விடை எழுதுக

1. நாட்டார் கதைகள் வேறு எப்பெயர்களால் அழைக்கப்படும்?
   - ❖ கிராமியக் கதைகள், நாடோடிக் கதைகள், வாய்மொழிமூலக் கதைகள்.

2. குடும்பஸ்தரின் வீட்டிலுள்ளவர்களின் பெயர்களை மாற்றி வைத்தமைக்கான காரணம் யாது?
   - ❖ எதிரிகள் செய்யும் சூனியங்கள் எதுவும் பலிக்காமல் இருப்பதற்காகவே தங்களது பெயர்களை மாற்றிக் கொண்டனர்.

3. மருமகன் பதற்றத்துடன் ஓடக் காரணம் யாது?
   - ❖ வீட்டில் உள்ளவர்கள் தங்கள் பெயர்களை மாற்றி உரையாடுவது தெரியாமல், எப்பொழுதும் அவர்களுக்கு தொல்லை கொடுப்பதால் தனக்குத்தான் அவ்வாறு பேசுவதாக எண்ணி மருமகன் பதறி ஓடினார்.



4. இக்கதையில் இடம்பெறும் கிராமிய நடைமுறைகள் 2 தருக?

- குறிசொல்லுதல், சீதனம் கொடுத்தல் , மாடு வளர்த்தல்

5. “நாளைக்காவது இந்த உலக்கையை எடுத்துக்கொண்டுபோய்க் கொடுக்க வேண்டும்” இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

- குடும்பஸ்தரால் தனக்குத்தானே

அடுத்த அலகில் மீண்டும் சந்திப்போம் ……



# -நன்றி-